

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, தஞ்சாவூர் மாவட்டம் கொள்ளிடம் ஆற்றில் மூழ்கி உயிரிழந்த எழும்பூர் நேரு பூங்கா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த 5 இளைஞர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.2 லட்சம் வீதம் மொத்தம் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையினை சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (11.09.2024) வழங்கினார். இந்நிகழ்வின் போது சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே உடனிருந்தார்.




தலைமைச் செயலகத்தில் நேற்று (12.09.2024) உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தலைமையில் உணவுத் துறை மற்றும் கூட்டுறவுத் துறையின் (பொது விநியோகத் திட்டம்), துறை அலுவலர்களின் ஒருங்கிணைந்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். ஜெ. ராதாகிருஷ்ணன், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை காவல் துறை இயக்குநர் திருமதி சீமா அகர்வால், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சு. பழனிசாமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் ஆ. அண்ணாதுரை, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர், த. மோகன், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு இணைச் செயலாளர் அமர் குஷ்வாஹா, கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் திருமதி ப. காயத்ரி கிருஷ்ணன் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருவள்ளூர் மாவட்டம் – குத்தம்பாக்கத்தில்

# ரூ.500 கோடியில் திரைப்பட நகருக்கான இடம் தேர்வு!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேட்டி!



சென்னை, செப்.13-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுரைக்கிணங்க, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன வளாகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.7 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ள குளிரூட்டப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ள படப்பிடிப்புத்தளம், மாணவர்களின் உணவருந்தும் அறை, படப்பிடிப்புக்கான நீதிமன்றம், சிறைச்சாலை உள்ளிட்ட பல்வேறு கட்டடப்பணிகளையும், ரூ.39.33 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள அதிநவீன படப்பிடிப்புத் தளங்களுக்கான இடங்களையும் நேற்று முன்தினம் (11.09.2024) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

பின்னர், அவர் செய்தியாளர்ளுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் மாணவர்களின் கல்வி நலனுக்கான பல்வேறு அடிப்படை உட்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2023-2024ஆம் ஆண்டுக்கான செய்தி மற்றும் விளம்பரத் துறையின் மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன வளாகத்தில் தற்போது செயல்பட்டு வரும் குளிர்சாதன படப்பிடிப்புத் தளத்தை போன்று மேலும் மூன்று புதிய அதிநவீன படப்பிடிப்புத் தளங்கள் ரூ.39.33 கோடி மதிப்பீட்டில் பொதுப்பணித்துறை வாயிலாக அமைத்திட அரசாணை வெளியிடப்பட்டு, அதற்கான இடங்கள் இன்று தேர்வு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்று தெரிவித்தார்கள்.

மேலும், முதலமைச்சர் அவர்கள் சென்னை, கிண்டியில் 06.01.2024 அன்று நடைபெற்ற "கலைஞர் 100" விழாவில், தென்னிந்தியாவில் இதுவரை இல்லாத வகையில் அனைத்து வசதிகளுடன் கூடிய அதிநவீன திரைப்பட நகரம் ரூ.500 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என அறிவித்தார்கள். இவ்வறிவிப்பினை நிறைவேற்றும் பொருட்டு, திருவள்ளூர் மாவட்டம், குத்தம்பாக்கத்தில் சுமார் 152 ஏக்கர் பரப்பளவில் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் விரைவாக தொடங்கப்படவுள்ளது என்று அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்துள்ளார்.

இந்த ஆய்வினைத் தொடர்ந்து, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் தலைமையில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன் மற்றும் இயக்குநர் செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு துணைச் செயலாளர் மரு.இரா.வைத்திநாதன் ஆகியோர் முன்னிலையில் பொதுப் பணித்துறை மற்றும் செய்தித்துறை அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு பணிகள் நீங்கலாக மாணவர் படப்பிடிப்புத் தளத்தினை புனரமைக்கவும், இப்பயிற்சி நிறுவன வளாகத்தினுள் பராமரிப்பின்றி உள்ள கட்டடங்கள், சுற்றுச்சுவர்கள் ஆகியவற்றை ஆய்வு செய்து அதனை புனரமைப்பதற்கான மதிப்பீட்டு அறிக்கையினை விரைவாக வழங்கிடவும் பொதுப்பணித்துறை அலுவலர்களை கேட்டுக் கொண்டார்.

இறுதியாக, செய்தி மற்றும் விளம்பரத் துறையின் 2021-2022ஆம் ஆண்டு முதல் 2023-2024ஆம் ஆண்டு வரையிலான மூன்று ஆண்டு மானிய கோரிக்கை அறிவிப்புகளின் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள், நடைபெற்று வரும் பணிகள் மற்றும் மேற்கொள்ளப்படவுள்ளப் பணிகளை விரைவுபடுத்திடுமாறு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அறிவுறுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சிகளில் செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர்கள் எஸ். செல்வராஜ், மு.பா.அன்புச்சோழன், பொதுப்பணித் துறை சென்னை மண்டல முதன்மை பொறியாளர் (கட்டடங்கள்), எஸ்.மணிவண்ணன், கூடுதல் முதன்மை பொறியாளர் (மின்) திருமதி சி. தில்லைக்கரசி, கண்காணிப்புப் பொறியாளர் எஸ்.முத்தமிழ் அரசு, செய்தி மக்கள் தொடர்புத் துறை இணை இயக்குநர்கள் மு.மேக வர்ணம், கு.தமிழ்செல்வராஜன், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன முதல்வர் (மு.கூ.பொ) ஜெ.வே.மோகனகிருஷ்ணன், பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் எஸ்.விஜய் ஆனந்த் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சந்தன மரங்களுக்கான விலையை நிர்ணயித்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியீடு!

சென்னை, செப். 13 -

15 வகையான சந்தன மரங்களுக்கு, மரங்களின் வகைகளுக்கேற்ப தமிழ்நாடு அரசு விலை நிர்ணயம் செய்துள்ளது.

அதன்படி, நியாய விலை, சில்லறை விலை இரண்டையும் நிர்ணயம் செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதில், 2020-21 நிதியாண்டு முதல் 2023-24 நிதியாண்டு வரை மரங்களுக்கு, அவற்றின் தரம், வகைகளுக்கேற்ப விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

சோட்லா வகை சந்தன மரத்துக்கு நியாய விலையாக மெட்ரிக் டன் ஒன்றுக்கு ஒரு கோடியே 64 லட்சத்து 35 ஆயிரத்து 200 ரூபாயாக விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

### கலாநிதி வீராசாமி எம்.பி. ஏற்பாட்டில் – ஸ்டான்லி மருத்துவமனைக்கு

# எம்.ஆர்.எப். நிறுவனம் ரூ.51 லட்சத்தில் மருத்துவ உபகரணங்கள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் வழங்கப்பட்டது!

சென்னை, செப்.13-

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி ஏற்பாட்டில் எம்.ஆர்.எப் (MRF) நிறுவனத்தின் சமூக பொறுப்பு நிதி (CSR) மூலம் இராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு ரூபாய் 51,30,000/ (51 லட்சத்து 30 ஆயிரம் மட்டும்) மதிப்புள்ள அறுவை சிகிச்சை மைய மேசை, மற்றும் அல்ட்ரா சோனோகிராம் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்களை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் மருத்துவ உபகரணங்களை மருத்துவமனை நிர்வாகத்திடம் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி வழங்கினார்.

இந்நிகழ்வில் சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ., மேயர் திருமதி. பிரியா ராஜன், ஸ்டான்லி மருத்துவமனை முதல்வர் டாக்டர் பாலாஜி, பகுதிக் கழகச் செயலாளர் இரா. செந்தில் குமார், எம்.ஆர்.எப் நிறுவன பொது மேலாளர் ஜேக்கப் சாக்கோ, ஜோசப் வி செரியன் (Deputy Plant Head MRF), என்.நந்தகுமார் (PRO MRF) ஜி.கஜேந்திரன் (CSR Coordinator MRF) மாவட்டக் கழக பகுதிக் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், மருத்துவர்கள், கலந்து கொண்டனர்.


